Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (17-8-65) இதழ் 186

விசுவாவசு ஆவணி 1 ரபி: ஆகிர் பிறை 19 செவ்வாய்க்கிழமை

## பறக்குந் தட்டு விமானி 28 அங்குல "மனிதர்!"

ஸோபோலோ (பிரேஸில்), ஆக. 16

உயரம்: இருபத்திரெட்டு அங்குலம். அதாவது சுமார் இரண்டரை அடி. உருவம்: பருத்த உடல். கண்கள் பிரகாசமாக ஒளி வீசிக்கொண்டிருந்தன. அந்த உருவம் பேசிய மொழி: போர்த்துக்கீஸ்.

இந்த உருவம் வேறு யாருமல்ல. சாட்சாத் பறக்கும் தட்டின் விமானியேயாகும். இச்சம்பவம் நேற்று முன்தினம் நிகழ்ந்தது.

திரு. ஜோட் டூறியோ என்பவர் கடந்த சனிக்கிழமை வழக்கம் போல தமது வீட்டுக்கு அருகாமையிலிருக்கும் ஆற்றங்கரைக்குச் சென்றிருந்தார். அங்கு பொழுது போக்காக மீன் பிடித்துக் கொண்டிருந்தபொழுது, எதிர்பாராதவிதமாக அவரை நோக்கி ஒரு குள்ள மனிதன் வந்து கொண்டிருந்ததை அவதானித்தார். அந்த மனிதர் ஒரு கிரகத்திலிருந்து தான் வந்திருந்தார்.

"நீர் யார்?" என்று கேட்டார் ஜோட்.

"நான் வேறு ஒரு உலகத்தைச் சேர்ந்தவன். பறக்கும் தட்டொன்றின் விமானியாக பணியாற்றுகின்றேன்" என்று பதிலளித்தார் அந்த குள்ள "மனிதன்". அவர் போர்த்துக்கீஸிய மொழியில் பேசியிருந்தார்.

இந்த விபரங்கள் யாவும் விளக்கமாக "டு பிரேஸில்" என்ற சஞ்சிகையில் வெளிவந்திருக்கின்றன.

திரு. ஜோட் (மீன் பிடித்தவர்) பிரேஸில்

(6-ம் பக்கம் பார்க்க)

# போலியோ நோய் தடுப்பு இயக்கம்

## மீண்டும் ஆரம்பிக்க மந்திரி நடவடிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

'போலியோ' என்னும் இளம்பிள்ளை வாதநோய் இலங்கையில் மிகத் தீவிரமாகப் பரவி வருவதால் இந்நோயைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமுகமாக சென்ற வாரம் சுகாதார மந்திரி சுகாகார வைத்திய அதிகாரிகளின் மகாநாடொன்றைக் கூட்டி ஆலோசனை நடத்தினர்.

நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள வைத்திய அதிகாரிகளும் சுகாதார வைத்திய அதிகாரிகளும் 'போலியோ' தடுப்புநோய் மருந்துகளை பெருமளவில் விநியோகிக்க வேண்டுமென்றும் உடனடியாக போலியோ நோய் தடுப்பு இயக்கம் ஆரம்பிக்க வேண்டுமென்றும் இந்த மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

## "காஷ்மீர் சம்பவம்: பாகிஸ்தானின்திட்டமிட்டசெயலே"

புதுடில்லி, ஆக. 16

ஜம்மு - காஷ்மீரில் நிகழ்ந்த சம்பவங்கள், பாகிஸ்தானின் திட்டமிட்ட செயல் என்று இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. சவான் அறிவித்துள்ளார்.

ஜம்மு-காஷ்மீரில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து திரு. சவான் இன்று ஒரு அறிக்கை வெளியிட்டார். இந்த அறிக்கையில், ஜம்மு-காஷ்மீரில் நடைபெற்ற சம்பவங்கள் பாகிஸ்தானின் அப்பட்டமான ஆக்கிரமிப்பு என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

"சிவிலியன்கள் உடையணிந்த பாகிஸ்தான் இராணுவத்தினர் அங்கு திட்டமிட்டு ஊடுருவல் செய்துள்ளனர். இவர்களின் ஊடுருவல்கள் குறித்து மத்திய அரசாங்கத்துக்கு முன்னதாகவே அறிவிக்கப்பட்டிருந்ததால்; முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளை நாம் எடுக்க முடிந்ததுடன் ஊடுருவல்காரர்களையும் தடுத்து நிறுத்தி வெற்றி கண்டிருக்கின்றோம்" என்றும் திரு. சவான் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

"ஜம்மு-காஷ்மீரில் பாகிஸ்தானியர்கள்ஊடுருவல் செய்ததற்கு போதுமான ஆதாரங்கள் எம்மிடம் இருக்கின்றன. ஊடுருவல் செய்த பாகிஸ்தானியர்கள் உபயோகித்த ஆயுதங்கள், வெடிமருந்துகள் யாவும் பாகிஸ்தானிய இராணுவத்தினரால் பயன்படுத்தப்படுவன. இக்கூற்று ஒன்றே எமக்குப் போதும்" என்றும் இந்திய பாதுகாப்பு மந்திரி அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஊடுருவல்காரர்கள் போர் ஓய்வுக் கோட்டை ஒரு இடத்தில்மட்டும் கடந்ததில்லை. அவர்கள், போர் ஓய்வுக் கோடு முழுவதும் தொடர்ச்சியாக நின்று ஊடுருவல் செய்துள்ளனர். இப்படியான கட்டத்தில் அவர்களைத் தடை செய்வது சிறிது கஷ்டமாகும். இருந்தபொழுதிலும் இந்திய ரோந்து படைகளின் தீவிரமான நடவடிக்கைகளினால் ஊடுருவல்காரர்கள் ஸ்ரீநகருக்கு உள்ளே வருவது தடை செய்யப்பட்டுவிட்டது" என்றும் திரு. சவான் தெரிவித்துள்ளார்.

## பாக். தரப்பில் மாண்டவர் 450?; 67 இந்தியர் பலியானர்கள்

புதுடில்லி, ஆக. 16

ஜம்முகாஷ்மீரில் ஊடுருவல்செய்த பாகிஸ்தானியர்களுக்கும் இந்திய படைகளுக்குமிடையே நிகழ்ந்த சண்டையில் இருதரப்பிலும் பலியானவர்களின் தொகையை இந்திய பாதுகாப்பு மந்திரி திரு சாவன் இன்று இந்திய லோகசபையில் தெரிவித்தார்.

"பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீரில் முஸாபராபாத்திலிருந்து ஆறு மைல் தூரத்தில் ஒரு வானொலி நிலையம் இயங்கிக்கொண்டு வருகிறது. இந்தநிலையம் இந்திய எல்லைக்குள் இல்லை" என்று மந்திரி சாவன் தெரிவித்தார்.

பாகிஸ்தான் தரப்பில் இரு அதிகாரிகளும், 151 துருப்புக்களும் ஊடுருவல் காரர்களும் கொல்லப்பட்டனர். இரு அதிகாரிகள் உட்பட 84 பேர்கைது செய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். இது தவிர பாகிஸ்தான் தரப்பில் 300 பேர் காணமற்போனவர்கள், அல்லது பலியானவர்கள் இருக்கிறார்கள்.

"இந்தியா தரப்பில் ஐந்து அதிகாரிகளும் 41 துருப்புக்களும் மற்றும் 21 பேரும் கொல்லப்பட்டனர்" என்று பாதுகாப்பு மந்திரி அறிவித்தார்,

## இன்று காளிமுத்து வழக்கு

யாழ்ப்பாணம், செவ்.

ஆனைக்கோட்டை கூழாவடியில் இம்மாதம் இரண்டாந்திகதி பட்டப்பகலில் நிகழ்ந்த கோரக் கொலை சம்பந்தமாக சந்தேகத்தின் மீது பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட கதிரவேலு காளிமுத்து இன்றுகாலையாழ்ப்பாணம்மஜிஸ்டிரேட்கோர்ட்டில் ஆஜர் செய்யப்படுவார். இன்றைய தினம் பொலிஸார் இவர்மீதான குற்றச்சாட்டுக்களை தாக்கல் செய்வார்கள்.

இம்மாதம் இரண்டாந்திகதி கூழாவடியில் நிகழ்ந்த கோர சம்பவங் காரணமாக திருமதி ரா ஐமார்க்கண்டுடன் காலமானது வாசகர்கள் அறிந்ததே. மைந்த தாக்குதலில் காயமடைந்த மற்றுமொரு பெண்ணான திருமதி தேவராஜன் தற்பொழுது குணமடைந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

## மந்திரி உத்தரவாதம்

கிளிநொச்சி, திங்கள்

கரைச்சிக் கிராம சபை அக்கிராசனர் திரு வி. ஆனந்தசங்கரி ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வத்தை பேட்டிகண்டு கரைச்சிக் கிராம சபையை பட்டினசபை ஆக்குவதை எதிர்த்து கரைச்சிக் கிராம சபை எடுத்த தீர்மானத்தையும் அதுபற்றிய மகஜரையும் சமர்ப்பித்தபொழுது ஸ்தலஸ்தாபன மந்திரி தான் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுடன் கரைச்சிக் கிராம சபைப் பகுதியைப் பார்வையிட்டுத் திருப்தியடையும்வரை கரைச்சிக் கிராம சபையை பட்டின சபை அந்தஸ்துக்கு உயர்த்தப்போவதில்லை என்று கரைச்சிக் கிராம சபைத் தலைவருக்கு உத்தரவாதம் அளித்துள்ளார்.

## மந்திரிகள் விஜயம்

யாழ்ப்பாணம், செவ்.

உள்நாட்டு மந்திரி டாக்டர் டபிள்யூ தகநாயக்கா, வீடமைப்பு மந்திரி திரு. எம். எச். முகமத் ஆகியோர், 21-ம் திகதி சனிக்கிழமை காலை விமான மூலம் யாழ்ப்பாணம் வந்தடைவார்கள்.

தமிழ் காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாண எம்.பி.யுமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், விமான நிலையத்தில் அவர்களை வரவேற்பார்.

அன்று காலை உள்நாட்டு மந்திரி திரு. தகநாயக்கா, புதிய அரசாங்க செயலகத்தை திறந்து வைப்பார். மாலையில், வீடமைப்பு மந்திரி திரு. முகமத், வீடமைப்பு திட்டங்களுக்கு அத்திவாரக்கல் நாட்டுவார்.

## சாஸ்திரி மந்திரிசபை மீது அவநம்பிக்கை பிரேரணை

### திங்களன்று விவாதம்

புதுடில்லி, ஆகஸ்ட் 16

சாஸ்திரி மந்திரி சபை மீது அவநம்பிக்கை தெரிவித்து எதிர்க் கட்சிகள் இன்று ஒரு பிரேரணையை இந்திய லோக சபையில் தாக்கல் செய்தன.

ஐம்பதுக்கும் அதிகமானவர்கள் இந்த அவநம்பிக்கை பிரேரணையில் கையெழுத்திட்டிருப்பதால் இதனை சபாநாயகர் அனுமதித்தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை சுதந்திரா கட்சியைச் சேர்ந்த மஸானி தாக்கல் செய்தார். இப்பிரேரணையில் குறிப்பாக எந்தப் பிரச்னையையும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிடப்படவில்லை. பொதுவாக மத்திய மந்திரி சபையில் நம்பிக்கையில்லை என்றே அப்பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரேரணை மீது திங்கட்கிழமை 23-ம் திகதி விவாதம் நடைபெறும்.

## வீடமைப்புத் திட்டங்கள்

### சிலதினங்களில் இடம் அறிவிக்கப்படும்

யாழ்ப்பாணம், திங்,

யாழ்ப்பாணத்தில் வீடமைப்பு திட்டங்களுக்கு தகுந்த இடங்களை தேர்ந்தெடுப்பதற்காக நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த திரு. ரஹீம் கரையூர் விளையாட்டு மைதானம், பாஷையூர் வீடமைப்புத் திட்டத்தின் பின்னுலுள்ள காணி, அரசினர் மரக்காலை, நரிக்குண்டு, தாராக்குளம், மொஸ்க்லேன், அராலிரோட்டில்உள்ளஒரு காணி, நாவாந்துறையில் உள்ளஒரு காணி ஆகியஇடங்களை, சம்பந்தப்பட்டஉத்தியோகத்தர்களுடன் சென்று பார்வையிட்டார்.

திரு. ரஹிம் கொழும்பு சென்றதும், வீடமைப்பு திட்டத்திற்கு தகுந்த காணியை தேர்ந்தெடுப்பார் என்றும், இன்னும் சில தினங்களுக்குள், அவர் தேர்ந்தெடுக்கும் காணி தெரியவரும் என்றும் அறியப்படுகிறது.

இம்மாதம் 21-ந் தேதி யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ் செய்யும், வீடமைப்பு மந்திரி திரு. எம். எச், மகமத் தேர்ந்தெடுக்கப்பட்டகாணிகளில் அத்திபாரக்கல் நாட்டுவார்.

## மந்திரியை சந்திப்பர்

பருத்தித்துறை, திங்கள்

வேலையற்ற பட்டதாரிகளது பிரச்னை குறித்துமீண்டும் இந்த வாரத்தில் கல்வி அமைச்சரை தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரமும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடாத்தவிருக்கின்றனர்.

தராதரப்பத்திர ஆசிரியர் சம்பளப் பிரச்னை, இன்ஸ்பெக்டர்கள் யூனியன் பிரச்னை, புயலால் சேதமடைந்த பாடசாலைக்கட்டிடப் பிரச்னை முதலான பல்வேறு பிரச்னைகள் குறித்தும் பேசுவார்கள் எனத் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

சமத்துவ பொருளாதார நீதியும், அனைவருக்கும் சமவாய்ப்பும்உள்ள வர்க்கபேதமற்றதொரு சமுதாயமே நமது இறுதி லட்சியமாக இருக்க முடியும்.

— நேரு


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆவணிமீ 1௨ (17-8-65)


## பொலிசாரும் பொதுமக்களும்

நாட்டில் இன, மதஒற்றுமையை ஏற்படுத்தப் பாடுபட வேண்டுமென்றும் நாட்டின் ஒற்றுமையைக் குலைக்க முயல்பவர்கள் விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்றும் பொலிஸ் அதிகாரிகளுடன் நடத்திய ஒரு மகாநாட்டில் பொலிஸ் அதிபர் ஆலோசனை கூறியிருக்கிறார். எப்பொழுதோ கூறியிருக்க வேண்டிய இந்த யோசனையை காலங்கடந்து கூறியிருப்பினும் வரவேற்க வேண்டியதுதான். பிரதமர் டட்லியும்கூட பொலிசார் இனமத ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறியிருக்கிறார்.

இதேசமயம் கிளிநொச்சிப் பகுதியிலும் கரைச்சிக் கிராமசபைப் பகுதியிலும் 'சட்டவிரோதக் குடியேற்றத் தடுப்பு நடவடிக்கை' என்ற போர்வையில் பொது மக்கள் பலர் பொலிசாரின் 'கெடுபிடி' நடவடிக்கைகளுக்கு இலக்காகி படும் துன்பங்கள் பற்றி கிளிநொச்சி எம்.பி.யும், கரைச்சிக் கிராமசபைத் தலைவரும் பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளனர். கிளிநொச்சிப் பகுதியில் மட்டுமல்ல நாட்டின் பல பகுதிகளிலும் குறிப்பாக வடபகுதியில் ''சட்டவிரோதத் குடியேற்றத் தடுப்பு நடவடிக்கை' என்ற போர்வையில் பொலிசாரும் இராணுவத்தினரும் செய்துவரும் கொடூரங்கள்பற்றி பார்லிமெண்டிலும் பல தடவைகளில் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. நாமும் இப்பத்திகளில் இதற்கு முன்னும் சுட்டிக் காட்டியிருக்கின்றோம். ஆனால் பொதுமக்களைப் பொலிசாரினதும் இராணுவத்தினரினதும் கெடுபிடிகளிலிருந்து பாதுகாக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பொதுமக்கள் குறிப்பாக தமிழ்பேசும் பெயருள்ள மக்கள் எந்நாளும் பீதியுடன் வாழ வேண்டியுள்ளனர். தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் ஓரளவு அச்சம் நீங்கிய போதிலும் மீண்டும் இந்தக் கெடுபிடிகள் தலை தூக்கியிருப்பது தேசிய அரசாங்கத்தின் மீது வைத்த நம்பிக்கையையும் சிறிது சிறிதாக இழக்கச் செய்கிறது.

சட்டவிரோதக் குடியேற்றத்தை இங்குயாரும் ஆதரிக்கவில்லை. ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் அம்பலாங்கொடையில் ஒரு வைபவத்தில் பேசுகையில் சட்டவிரோதக் குடியேற்றத்தை இந்நாட்டிலுள்ள தமிழ்பேசும் மக்கள் ஆதரிக்கவில்லையென்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார், சொந்தக் கோபத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக 'மொட்டைக் கடிதம்' எழுதியவுடனேயே ஒன்றுமறியாத மக்கள் சிலர் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்று பொலிசாரின் கெடுபிடிக்குள்ளாகிறார்கள். சட்டவிரோதக் குடியேற்றத்தடுப்பு நடவடிக்கை என்ற போர்வையில் நடைபெறும் மிருகத்தனமான செயல்களையே தமிழ்பேசும் மக்கள் எதிர்க்கிறார்கள். நள்ளிரவில் பொலிசாரும் இராணுவத்தினரும் வீடு புகுந்து தலைமுறை தலைமுறையாக வசித்துவரும் மக்களைத் துன்புறுத்துவதும் பிள்ளைகளையும் தாயையும் அவர்களின் ஒரே பாதுகாவலரான குடும்பத் தலைவனிடமிருந்து பிரிப்பதும் இங்கு காணும் காட்சிகள். இவ்வித செயல்கள் இங்கு இன ஒற்றுமைக்கோ, மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கோ வழிவகுக்க மாட்டா.

பொலிசாரும் இராணுவத்தினரும் பழைய காலனி ஆதிக்க முறையையே பின்பற்றி பொதுமக்களைப் பயமுறுத்தி நடந்து கொண்டதால் தான் 1956-ம் ஆண்டில் யு. என். பி. தோல்வியடைய நேரிட்டதென்பதையும் தேசிய அரசாங்கம் நினைவில் கொள்ள வேண்டும். பொதுமக்களின் பாதுகாவலர்கள் என்பதையும் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் தான் நாட்டில் ஒற்றுமையையும் அமைதியையும் பாதுகாக்க முடியுமென்பதையும் பொலிசாரும் இராணுவத்தினரும் அரசாங்கமும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

## கதிர்காம தீக்குளிப்பு

கதிர்காமம், திங்கள்

கதிர்காமத்தில் கடந்த ஆறுமாதங்களாகத் தொடர்ந்து நிலவிய கடும் வரட்சி தொடர்ந்து பெய்துகொண்டிருந்த பேய் மழையினால் சற்று குறைந்தது. பல்லாயிரக்கணக்கான அடியார்கள் திருக்கூட்டம் பொழிந்த கடும் மழையையும் கவனியாது இறைவனை வேண்டுதலிலே கண்ணும் கருத்துமாக நின்றனர்.

முருகன் சந்நிதானத்தில் நடைபெற்ற தீக்குளிப்பு வைபவத்தில் ஐநூறுக்கதிகமான அடியார்கள் கலந்து கொண்டனர். சென்ற வருடங்களிலும் பார்க்க இம்முறை அநேக பெண்களும், சிறுவர்களும் இங்கு குழுமியிருந்த இரண்டு லட்சத்திற்கதிகமான பக்தர்கள் முன்னிலையில் வியக்கத்தக்க முறையில் தீமீது நடந்து தங்களது நேர்கடன்களைப் பூர்த்திபண்ணினர், முருகனின் திருவருள் சக்தி கதிர்காமம் எங்குமே அலைமோதும் இத்தருணத்தில் ஒருவருக்குமே எதுவித காயமேனும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

ஈழத்தின் எண்திக்குகளிலிருந்தும் பக்தகோடிகள் மாணிக்க கங்காதீரத்திலே கோயில்கொண்டெழுந்தருளியுள்ள எம் ஈசனைத்தொழுதேத்த ஆயிரமாயிரமாகக் குவிந்தவண்ணமாக விருந்தனர், ''முருகா'' ''முருகா'' என்ற அன்பு ஒலியே எங்கும் கேட்டவண்ணமாக இருந்தது. சென்ற ஆண்டுகளைப்போல் அல்லாது ஒருவகைப் பயமின்மையும், ஆர்வமும் மக்களிடம் மிகுந்திருப்பதினால் யாத்திரீகர் தொகை இம்முறை மிதமிஞ்சிவிட்டது. கதிர்காம க்ஷேத்திரத்தில் உள்ள மடங்களில் சிறப்பாக இராமகிருஷ்ண மடம் அடியார்களுக்கு ஊணும், உறையுளும் வழங்கியதால் அடியார்கள் தங்கள் நேர்த்திக் கடன்களைச் சிறப்புறச் செய்து முடித்தனர்.

## ந[illegible] வடக்கு, கிழக்கை [illegible] வேண்டும்

— வி. நவரத்தினம்

உடுப்பிட்டி, திங்கள்

''தமிழ்மக்களின் எதிர்காலம்பற்றிய கேள்விகளுக்கு என்னால் விடைகூறமுடியும். 1946-ம் ஆண்டு குடிசனமதிப்புப்படி 25 லட்சம் மக்கள் தமிழ்பேசுபவர்கள். மலைநாட்டு மக்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுத்தால் பாராளுமன்றத்தில் தமிழரின் பிரதிநிதித்துவம் ஓங்கிவிடும் என்பதற்காக பிரஜாவுரிமைச்சட்டத்தை அன்று கொண்டுவந்தார்கள். இதனால் பத்துலட்சம் தமிழ் மக்களை இந்தநாட்டின் பிரஜைகள் அல்ல என்று 1948-ல் சட்டமியற்றினார்கள், வடக்குகிழக்கு மாகாணங்களில் பரம்பரையாக வசித்துவரும் தமிழ்மக்களை ஒடுக்கவேண்டும் என்றே பலரும் விரும்புகிறார்கள். திருக்கோணமலையைக் கண்டிராச்சியத்துக்குட்பட்ட பகுதியாகக் கருதி அதனைச் சிங்களமக்கள் வாழும் பகுதியாக்க வேண்டும் என்று பலர் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழர்கள் பளங்கதைபேசிப் பெருமையடித்துக்கொண்டிருக்கிறார்களே தவிர செயலில் எதையும் சாதிப்பது கிடையாது.

இவ்வாறு ஊர்காவற்றுறை எம்.பி. திரு வி. நவரத்தினம் நெல்லியடிச் சந்திக்கருகாமையில் நெல்லியடி தமிழரசுக்கட்சிக்கிளைக் காரியாலயத்தைத் திறந்துவைத்துப்பேசுகையில் கூறினார்.

நெல்லியடி பட்டினசபை முதலாம் வட்டார அங்கத்தவர் திரு கே. சின்னையா தலைமைவகித்த இக் கூட்டத்தில் திரு நவரத்தினம் மேலும் குறிப்பிட்டதாவது:-

இலங்கை-இந்தியர் பிரச்னையைச் சுலபமாகத் தீர்க்கவேண்டுமானால் வடக்கு கிழக்குமாகாணங்களிலுள்ள குடியேற்ற நிலங்களிலும், காடுகளிலும் 'நாடற்றவர்' என்று கருதப்படுபவர்களை குடியேற்றுவதே மேலான வழி என்று நாம் 1956-ம் ஆண்டிலேயே திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவிடம் கூறினோம். அவர் ஏற்கவில்லை. இப்பொழுது அதையே நான் கூறுகிறேன். இன்று மூதூர்த் தொகுதியில் சுமார் 16,000 இஸ்லாமிய வாக்காளர்களும், 13,000 சிங்கள வாக்காளர்களும், 12,000 தமிழ் வாக்காளர்களும் வசிக்கின்றார்கள். குடியேற்றமும், கள்ளக்குடியேற்றமுமே இதற்குக் காரணமாகும். திருக்கோணமலைப் பகுதியிலும் ஒரு வீட்டில் மாத்திரம் 123 சிங்கள வாக்காளர்கள் பதிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள். அங்கு 'லவ்லேன், என்னுமிடத்தில் சிங்கள மக்கள் கள்ளக்குடியேற்றம் செய்கிறார்கள். கந்தளாய் முற்றுகச் சிங்கள மயமாகிவிட்டது. நமது கண்மூடித்தனத்தால் கிழக்கு மாகாணத்தில் பலமுக்கிய பகுதிகள் பறிபோய்விட்டன.

இன்று இலங்கையிலுள்ள சூழ்நிலையில் தமிழ் மக்கள் உயிரோடு வாழ்வதற்குரிய முக்கிய பாதுகாப்பு பொலிஸ்-ராணுவம்-கப்பல்படைகளல்ல, நிலம் தான் நமது பாதுகாப்புச்சாதனம். 1958 கலவரத்தின் போது தகுந்த ராணுவ பாதுகாப்பளிக்கமுடியாத அரசாங்கம் இருபதாயிரம்தமிழ் மக்களைக் கப்பலில் ஏற்றி யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத்தது தமிழ்ப் பிரதேசம் என்று ஒன்று இருந்தபடியால்தான் நாம்துணிந்து வரமுடிந்தது. எனவேநமது சந்ததிகளைப் பாதுகாக்காவாவது வடக்குக்கிழக்கு மாகாணங்களைப் பாதுகாக்கவேண்டியுள்ளது.

### மீண்டும் ஏமாற்றமா?

அரசாங்கத்துடன் சேர்ந்துவிட்டதால் உரிமைகள் கிடைத்துவிட்டதாக நினைக்கமுடியாது. என்னைப் பொறுத்தவரையில் நாம் திரும்பவும் ஏமாற்றப்படுவோமோ என்ற சந்தேகமிருக்கிறது, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்களக் குடியேற்றம் நடக்காது அரசாங்க அலுவல்களைத் தமிழில் நடத்தலாம் என்பது போன்ற உறுதிமொழிகளை தேசிய அரசாங்கம் கொடுத்ததிலிருந்தே அதற்கு ஒத்துழைப்புக் கொடுத்தோம். ஒரு வருடத்திற்குள் மாவட்ட சபைகளை நிறுவுவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். உறுதிமொழிகளைக் காப்பாற்றுவார்கள் என்றே நம்புகிறோம். அரசாங்க ஊழியர் விஷயத்தில் தேசிய அரசாங்கம் தனது உறுதிமொழியைக் காற்றில் பறக்கவிட்டுவிட்டது. இதற்காக அதனை இப்பொழுதே முறித்துக்கொள்வதும் புத்தியாகாது. பொறுத்திருந்து பார்ப்போம்.

### கல்வி மந்திரி கூறியவாதம்

சுமார் ஆயிரத்திற்குமேலான வேலையற்ற தமிழ்ப் பட்டதாரிகளுக்கு வேலை கொடுக்கும்படி கல்வி அமைச்சரைப் பேட்டிகண்டபோது அவர் தென்னிலங்கையில் அவர்களை ஆசிரியர்களாக்கலாம். ஆனால் சிங்களத்தில் நல்ல தேர்ச்சிபெற வேண்டும், என்று கூறிவிட்டு அதே நேரத்தில் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட பயிற்றப்பட்ட எஸ். எஸ். சி. சித்தியடைந்த சிங்கள இளைஞர்களை வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சிங்களம் படிப்பிப்பதற்கு விடலாமா என்று கேட்டார். நாம் உடனடியாக மறுத்து தமிழர்-சிங்களவர் பிரச்னையைத் தீர்த்து வைக்கும்வரையும் முடியாது என்று கூறினோம்.

இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதியாக ஓர் தமிழர் ஐ. நா. சபைக்குச் செல்லும் தூதுகோஷ்டித் தலைவராயுள்ளார் என்பதையிட்டு மிகவும் பெருமைப்படுகிறோம்.

## ஆடிமாதப் பஜனை

தொல்புரம், திங்கள்

தொல்புரம் ஆதி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தொல்புரம் இளைஞர் விவசாயக்கழகக் காரியதரிசி திரு. சி. வரதராசா தலைமையில் ஆடிமாதக் கடைசி வெள்ளிக்கிழமை பஜனை பக்திசிரத்தையுடன் கொண்டாடப்பட்டது. பஜனையில் அனேக மாணவ மாணவிகள் உட்படப் பலர் பங்குபற்றினர். முடிவில் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

## நாட்டிலும் நகரிலும்

இலங்கையின் பல பாகங்களில் இப்பொழுது மழை பெய்து கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தையும வன்னிப் பகுதிகளையும் பொறுத்த வரையில் இந்த மழை நன்மைக்கா தீமைக்கா? இந்தக் கேள்விக்கு ஒவ்வொருவர் ஒவ்வொரு மாதிரி விடையளிக்கக் கூடும். கொடிய கானல் பாய்ந்த கோடைக்குப் பின் மழை பெய்வதை பொதுவாக எல்லோரும் தான் வரவேற்பார்கள். வெப்பத்தால் உண்டாகும் நோய்கள் தணியும். நீர் நிலைகள் நிரம்பும், பட்டுப்போகும் மரங்கள் தழைக்கும். கால்நடைகளுக்கு புல் முளைக்கும்.

ஆனால் வேளாண்மை செய்வோர், இவ்வளவு நன்மைகள் இருந்த போதிலும், ஆடி மழையை விரும்புவதில்லை. காலபோக நெற்பயிர் செய்பவர்கள் இந்த மழை ஈரத்துடன் நெல் விதைத்தால் பயிர் கிசுகிசுவென்று வளர்ந்து விடும். மறுபடி புரட்டாதி மாதத்தில் வெய்யில் காயுமானால் முளைத்த பயிர் எல்லாம் வாடிப்போகும். இந்த மாதத்தில் பொதுவாக மழை பெய்ய மாட்டாது. ஆவணி மாதம் பிற்பகுதிதான் நெல் விதைப்புக்கு உகந்த காலம் என்று யாழ்ப்பாணத்துக் கமக்காரர்கள் தங்கள் பழுத்த அனுபவத்தைக் கொண்டு சொல்வார்கள்.

வெங்காயம் நட்டவர்களுக்கும் இந்த மழையினால் நட்டமே உண்டாகும். இப்பயிருக்கு நீரை அளவுடன் பாய்ச்ச வேண்டும். மழை பெய்தபடியால் திரண்டுவரும் வெங்காயம் அழுகிப் போய்விடும். இப்படியே இந்த மழையினால் நன்மையுமுண்டு தீமையுமுண்டு. சென்ற வருடம் மாரி பொய்த்து விட்டதல்லவா? அந்த வட்டியெல்லாம் சேர்ந்து இவ்வருடம் ஆடி முதல் மார்கழி ஈறாக மழை பெய்து கொண்டே இருக்குமா? யார் கண்டார்கள்!

ஃ ஃ ஃ

சின்ன மௌலானா சாகிபுவின் நாகசுரக் கச்சேரியை கடந்த செவ்வாய், வியாழக்கிழமைகளில் வானொலியில் கேட்டவர்கள் 'ஒரு முஸ்லிம் இப்படியும் நாகசுரம் வாசிப்பாரா?' என்று வியந்தார்கள். தென்னிந்தியாவில் இவரைப் போல இன்னும் பலர் இருக்கிறார்கள். அங்கே தமிழ்ப் பண்பாடும் இஸ்லாமிய பண்பாடும் ஒன்று கலந்து வளர்ந்திருக்கின்றன. வட இந்தியாவில் கொடிய இந்து-முஸ்லிம் சண்டைகள் நடந்த காலத்திலும் தென்னிந்தியா அமைதியாக இருந்தது. நிற்க,

சின்ன மௌலானா சாகியும் ஹஸன் சாகிபும் சங்கீத ரஸிகர்களுக்கு ஒரு புதிய அனுபவத்தை உண்டு பண்ணி எல்லோரையும் கட்டுண்ட நாகம்போல் மெய்மறக்கச் செய்து விட்டார்கள். சுத்த சீமந்தனி, சரஸ்வதி ராகக் கீர்த்தனங்களில் அவர்கள் நிரவல் செய்து சுரம் வாசித்தது ஒரு தனிப் பாணி. வட இந்திய ஷனாய் வாத்தியகாரரைப் போல் ஒருவர் ஒரு சுரத்தில் கார்வை கொடுத்து நிற்க மற்றவர் சுர ஆலாபனம் செய்து கொண்டு வந்தது மிகவும் அற்புதமாயிருந்தது. சின்ன மௌலானாவின் பிரமிக்கத்தக்க பிர்க்காக்கள் அளவு மீறியில்லாமல் அவுட்டுக்குள்ளிருந்து எலி வாணங்கள் புறப்பட்டது போலிருந்தன.

தவில் கச்சேரியில் வலங்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

கைமான் சண்முகசுந்தரமும் யாழ்ப்பாணம் தட்சணாமூர்த்தியும் கும்பகோணம் சுவாமிநாதனும் அதியற்புதமான நாதங்களை எழுப்பி ரஸிகர்களை திணறடித்து விட்டார்கள்.

சாகிபு அவர்களின் நிரவல் செய்யும் பாணியை இலங்கையிலுள்ள நாகசுரக்காரர் பின்பற்ற வேண்டும் என்று மிகவும் பலமாக வற்புறுத்த விரும்புகிறேன்.

--வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீநகரில் இரவில் ஊரடங்குச் சட்டம் அமுல்

## பாகிஸ்தானிய ஊடுருவல்காரர் பல இடங்களில் கைது

### லை நகருக்கருகில் பலத்த சண்டை

புதுடில்லி, ஆக. 16

காஷ்மீர் தலைநகரான ஸ்ரீநகரில் நேற்று முதலிரவில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நேற்றிரவு ஸ்ரீநகருக்குத் தென்மேற்கே 18 மைல் தூரத்தில் பாகிஸ்தானிய ஊடுருவல்காரர்ளுக்கும், இந்திய பாதுகாப்புப்படையினருக்குமிடையில் கடும் சண்டை நடைபெற்றதாகவும், பலத்த ஆட்சேதத்தின் பின் ஊடுருவல்காரர் பின்வாங்கிச் சென்றுவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

ஊடுருவல்காரர் இப்பகுதியில் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் பொதுமக்கள் இருவர் கொல்லப்பட்டனர்.

மண்டி என்ற இடத்தில் ஊடுருவல்காரர் 50 பேர் இந்திய பாதுகாப்புப்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்றுக்காலை ஸ்ரீநகருக்கு சிலமைல்தூரத்தில் ஊடுருவல்காரர் பொலிஸ்நிலையம் ஒன்றின்மீது சுட்டதில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் பலத்த காயமடைந்தார்.

சென்ற வெள்ளிக்கிழமை ஊரி என்ற இடத்தில் போர்நிறுத்த எல்லையைக் கடந்துவந்த பாகிஸ்தானிய ஊடுருவல்காரர் சனிக்கிழமை இரவும்பகலும் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இந்திய பாதுகாப்புப் படையினர் திருப்பிச் சுட்டதும் அவர்கள் பின்வாங்கிச் சென்றனரென அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**தீ வைத்து பெரும் சேதம்**

பட்டாமல்லோ என்ற இடத்தில் சனிக்கிழமை ஏற்பட்ட தீவிபத்தில் பெரும் சேதமேற்பட்டுள்ளது. தீ வைத்ததற்குக் காரணமானவர்களைக் கண்டுபிடிப்பதில் இந்தியப் பாதுகாப்புப்படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். தீவைத்து நாசம் செய்யப்பட்ட இடத்தில் ஆயுதம் தாங்கிய நான்கு பாகிஸ்தானியர் கைதுசெய்யப்பட்டதாகவும், நாசவேலைசெய்யும் நோக்கத்துடனேயே அவர்கள் இங்கு புகுந்திருப்பதாகவும் ஓர் அதிகாரி தெரிவித்தார்.

தீவைப்புச் சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி அளிக்கும்பொருட்டு உடனடியாக உதவி முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்கெனப் பிரதம மந்திரி தமது நிதியிலிருந்து 50,000 ரூபாய் வழங்கியுள்ளார்.

---

### குழந்தைகள் கலைக் களஞ்சியம்

சென்னை, ஆக. 16

குழந்தைகள் கலைக்களஞ்சியத்தின் மாதிரியொன்றை தமிழ் நாட்டின் முதன் மந்திரி திரு. எம். பக்தவத்சலம் நேற்று வெளியிட்டார்.

தமிழ் வளர்ச்சிக் கழகம் இக் கலைக்களஞ்சியத்தை தொகுத்து வெளியிடும். ஏழு தொகுதிகளாக வெளியிடப்படவிருக்கும் இத் தொகுதியின் முதலாவது தொகுதி ஒன்றரை வருடத்தில் வெளியிடப்படும். ஏழாவது தொகுதி ஏழுவருட முடிவில் வெளியிடப்படும். இதற்கு 12 லட்சம் ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது.

---

### காஷ்மீர் செல்லும்

புதுடில்லி, ஆக. 16

காஷ்மீரில் தோன்றியுள்ள நிலைமையை நேரில் கண்டறியும் பொருட்டு நான்கு அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு தூதுகோஷ்டியை அனுப்புவதென பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் நிர்வாக சபை தீர்மானித்துள்ளது.

---

### ஜெர்மன் எல்லையில் இலங்கை எம். பி.

பெர்லின், ஆக. 16

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கு விஜயம் செய்துள்ள இலங்கை தெகியோவிட்ட எம். பி. திரு. தனபால வீரசேகரா கடந்த புதன்கிழமை பெர்லினில் புரான்டன்பர்க் வாயிலுக்குச் சென்று ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் எல்லையைப் பார்வையிட்டார். பின்னர் நகரத் தளபதியின் விருந்தினர் புத்தகத்தில் கீழ்க்காணும் குறிப்பை எழுதினார்:-

''இங்குள்ள பிரச்சினைகள் மேற்கு ஜெர்மனியிலும், அமெரிக்கர்களாலும் சிருஷ்டிக்கப்பட்டவை என்பது இங்கு காணப்படும் சாட்சியங்களிலிருந்து தெளிவாகிறது. உலக சமாதானத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. இங்குள்ள இராணுவ வீரர்களின் துணிச்சலையும் பொறுமையையும் நான் பெரிதும் பாராட்டுகிறேன்''

---

### வியட்நாமுக்கு உதவி ஸ்தாபனம்

பெர்லின், ஆக. 16

வியட்நாம் மக்களுக்கு உதவும் பொருட்டு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் ஒரு வியட்நாம் ஆதரவுக் குழு நிறுவப்பட்டுள்ளது.

''வியட்நாம் தனியாக நிற்கவில்லை. அது விடுதலைக்காகப் போராடும் எல்லா மக்களின் ஒரு சின்னமாகிவிட்டது. நாம் வியட்நாமுடன் கை கோர்த்து நிற்கிறோம்'' என்று இக் குழுவின் தலைவரும், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் உதவிப் பிரதமருமான திரு. மார்க்ஸ் செப்ரின் கூறினர்,

---

### மார்ஷல் சென் யீ

ஜாகர்த்தா, ஆக. 16

இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரியும் உதவிப் பிரதமருமான மார்ஷல் சென் யீ இப்பொழுது ஜாகர்த்தா வந்துள்ளார்.

மலேசியாவிலிருந்து சிங்கப்பூர் தனியாகப் பிரிந்துவிட்டதைத் தொடர்ந்து அரசியல் நிலைபற்றி ஆராய அவர் இங்கு வந்திருக்கக்கூடுமெனக் கருதப்படுகிறது.

---

### ஜனசங் கருத்து

புதுடில்லி, ஆக. 16

காஷ்மீரில் பாகிஸ்தானியர் ஊடுருவல் செய்துள்ளதன் மூலம் கட்ச் ஒப்பந்தத்தை பாகிஸ்தான் சிதைத்து விட்டதென்று ஜனசங் கட்சியின் காரியக் கமிட்டி தெரிவித்துள்ளது.

---

### இனக்கலகம் பற்றி விசாரணை தேவை

நியுயோர்க், ஆக. 16

லொஸ் ஏன்ஜல்ஸில் நடைபெற்ற இனக் கலவரம் பற்றி விசாரணை செய்ய வேண்டுமென அமெரிக்க நீக்ரோக்களின் தலைவர் டாக்டர் மார்ட்டின் லூதர் கிங் கோரியுள்ளார்.

லொஸ் ஏன்ஜல்ஸ் நகரில் இப்பொழுது அமைதி நிலவு [illegible] தர அமைதி தோன்ற [illegible] வில்லையாம். இனக்கலகத்தில் இதுவரை 28 பேர் மாண்டனர்.

---

## "நிரந்தர சமாதானத்துக்கு சகிப்புத்தன்மையே வழி"

— திரு. சச்சார்

கொழும்பு, திங்கள்

''ஐ. நா. சாசனத்தில் கூறப்பட்டபடி யுத்தத்திலிருந்து இருபெரும் சந்ததியினரைக் காப்பாற்றவும், மனித சமூக அடிப்படை உரிமைகளிலும், மனிதனுடைய கௌரவத்திலும் பெறுமதியிலும், ஆண், பெண் சமவுரிமையிலும், பெரிய சிறிய நாடுகளில் நம்பிக்கை கொள்ளச் செய்யவும், சமூக முன்னேற்ற நல்வாழ்வு அமையவும் சகிப்புத் தன்மையைக்கடைபிடிக்கவேண்டும்.'

விவேகானந்த சபையின் ஆதரவில் நடைபெற்ற கூட்டமொன்றில் 'சமாதானத்துக்குப் பாதை' என்னும் பொருள்பற்றிப் பேசிய இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனர் திரு. பீம்சின் சச்சார் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொழும்பு மோடி மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டம் நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நடைபெற்றது.

திரு. சச்சார் மேலும் குறிப்பிட்டதாவது:-

''தனிப்பட்டவர்கள் எவ்வாறோ உலகமும் அவ்வாறே தனிப்பட்டவர்கள் மேல் நிலைக்குக் கொண்டுவருவதற்காகவே நமது முயற்சிகள், ஆக்கதிட்டங்கள், இயக்கங்கள் எல்லாம் இயங்குகின்றன. இதைத் தான் சுவாமி விவேகானந்தரும் 'தனிப்பட்டவர்களைத் திருத்திவிட வேறு குறிக்கோள்கள் கிடையாது' எனக்கூறியுள்ளார்,

உலகில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவும், மக்களை நல்வழிப்படுத்தவும் சகிப்புத்தன்மையைக் கடைப்பிடிக்கவேண்டும்.

சமயமும் விஞ்ஞானமும் ஒன்றோடு ஒன்று போட்டியிடக்கூடிய சக்திகளல்ல. இரண்டும் மனிதனுடைய மனதிலே உண்மைகளையே தேடுகின்றன, விஞ்ஞானம் புறக்கண்ணால் உண்மையைத் தேடுகின்றது. சமயம் அககண்ணால் உண்மையைத் தேடுகின்றது.

எமது சமயம்தான் எமது பாரம்பரியம். கலாச்சாரமும் அதுதான். இதையிட்டு நாம் பெருமைப்படவேண்டும். இன்றைய இளைஞர்கள் இப்படியான சமசூழ்நிலைக்கேற்ப வாழ்ந்தால் எந்தஒரு நாட்டு வீரர்களாக மட்டும் வாழாமல் உலக வீரர்களாக வாழமுடியும்.

தனிப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் உலகத்தோடு சேர்ந்தவர்கள் என்று உணர்ந்து அதன்படி வாழவேண்டும். இப்படி வாழ்ந்தால் வெறுப்பு அன்பாகவும், பொறாமை நன்மையாகவும் குறுகிய நோக்குப் பரந்த நோக்காகவும் மாறும்.

திரு. லக்ஷ்மன் நன்றி கூறினர்.

---

## "இலங்கையின் உயர்வு தாழ்வு இந்தியாவிலேயே தங்கியுள்ளது"

— கிளிநொச்சி எம். பி.

யாழ்ப்பாணம், செவ்.

''இந்தியாவும், இலங்கையும் சகல துறைகளிலும் இறுகப் பிணைக்கப்பட்டிருக்கின்றன. மொழியால், நாகரீகத்தால், கலாச்சாரத்தால் இருநாடுகளும் ஒன்றுபட்டு ஐக்கியமாகியிருக்கின்றன. இந்தியாவுக்கும் இலங்கைக்குமுள்ள தொடர்பு போல வேறு எந்தநாட்டுக்கும் நெருங்கிய தொடர்பு கிடையாது. இலங்கையின் உயர்வும் தாழ்வும் இந்தியாவிலேயே தங்கியிருக்கிறது'' என்று கிளிநொச்சி எம்.பி.பண்டிதர் கா. பொ. இரத்தினம் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இந்திய சுதந்திரதின 19-வது ஆண்டுவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. ரி. எஸ். இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

''இந்தியாவின் சுதந்திரத்தை ஆத்மீகப் போராட்டத்தின் மூலம் பெற்றுக்கொடுத்த காந்திஜீ அரசியல், சமயம், வாழ்வு மூன்றையும் ஒன்ருக இணைத்து மக்களிடையே புதியதோர் திருப்பத்தைஏற்படுத்தினர். கத்தியின்றி, இரத்தமின்றி, சத்தியாக்கிரகத்தின் மூலம் அவர் பெற்றுக் கொடுத்த சுதந்திரம் பலநாடுகளுக்கும் சுதந்திரத்தை அளித்துள்ளது. வலியிழந்த சிறுபான்மையினத்தவர் அகிம்சைப் போராட்டத்தின் மூலம் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற உண்மையை அவர் எமக்கு உணர்த்தியுள்ளார்.

நமது நாட்டிலே இந்தியர்கள் பலர் ''கள்ளத்தோணி'' என்ற நாமஞ் சூட்டப்பட்டு துன்புறுத்தப்படுகிறுர்கள். ஈவிரக்கமற்ற முறையில் தண்டிக்கப்படுகிறுர்கள். இவைகளிலிருந்து அவர்களைக்கவனிக்க அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். இதேநேரத்தில் இந்திய அரசாங்கம், குறிப்பாக சென்னை அரசாங்கம் அங்கிருந்து இலங்கைக்கு வரமுயற்சிக்கும் இந்தியர்களை இங்கு வராதபடி தடுத்து நிறுத்தவேண்டும். இங்கு அவர்கள்வந்து 'நாடற்றவர்கள்' என்ற பெயர் சூட்டப்பட்டு, பலவித வேதனைக்குள்ளாவதைவிட அங்கிருந்து சாவதே மேல்.''

வட்டுக்கோட்டை எம்.பி. திரு அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

ஒரு நூற்ருண்டு காலமாக அந்நிய ஏகாதிபத்தியத்தின் கைப்பிடியிலே அடிமையாகச் சிக்குண்டிருந்த பாரதம் காந்தி, நேரு போன்ற தலைவர்களின் அயராத போராட்டத்தின் விளைவாக சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டது. இந்த சுதந்திரம் தியாகம் பல செய்ததன் விளைவாகவே பெற்றுக்கொள்ளப்பட்டது. இதனுல் இச் சதந்திரதினம்பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவே

(5-ம் பக்கம் பார்க்க)

---

### ஆப்கான் செல்வார்

மாஸ்கோ, ஆக, 16

சோவியத் பிரதமர் திரு. கோஸிஜினும் கம்யூனிஸ் கட்சித் தலைவர் பிரஸ்னேவும் ஆப்கானிஸ்தானுக்கு விஜயம் செய்யுமாறு ஆப்கானிஸ்தான் மன்னர் விடுத்த அழைப்பை ஏற்றுக் கொண்டார்.

---

## "காஷ்மீர் கிளர்ச்சிக்கும் பாகிஸ்தானுக்கும் தொடர்பில்லை'

புட்டோ

கராச்சி, ஆக. 16

காஷ்மீரில் போர் நிறுத்த எல்லையைக் கடந்த ஊடுருவ முயன்ற இந்தியத் துருப்புக்களை பாகிஸ்தான் பாதுகாப்புப்படையினர் விரட்டியடித்துக் கலைத்துவிட்டதாக பாகிஸ்தான் அரசாங்க அதிகாரி யொருவர் தெரிவித்தார். இந்தியத் தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டதாகவும் அந்த அதிகாரி கூறினர்,

காஷ்மீரில் விடுதலைக்காகப் போராடும் மக்களிடம் பாகிஸ்தான் அனுதாபம் கொண்டிருப்பினும் இப்பொழுது அங்கு நடைபெறும் கிளர்ச்சிக்கும் பாகிஸ்தானுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி ஜுைப் பூட்டோ தெரிவித்துள்ளார்.

---

## மலாயாவுக்கும் சிங்கைக்கும் பிரிட்டன் தொடர்ந்து உதவி

லண்டன், ஆக. 16

வெளியார் தாக்குதலிலிருந்து தம்மைக் காப்பாற்றிக்கொள்வதற்கு மலேசியாவுக்கும் சிங்கப்பூருக்கும் பிரிட்டன் தொடர்ந்து உதவியளித்துவரும் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் வாக்குறுதியளித்துள்ளது.

பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் வெளிவிவகார மந்திரி திரு. ஸ்ருவார்ட் மற்றும் முப்படைத் தளபதிகள் ஆகியோர் நேற்று அவசரமாகக் கூடி மலேசிய கூட்டமைப்பிலிருந்து சிங்கப்பூர் பிரிந்ததனுல் எழுந்துள்ள நிலைபற்றி ஆராய்ந்தனர்.

இம் மகாநாட்டின் முடிவில் விடுக்கப்பட்ட அறிக்கையில் சிங்கப்பூரும் மலேசியாவும் தமக்கு உதவிதேவை எனக் கருதும்வரை அவைகள் தம்மை வெளியார் தாக்குதலிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கு பிரிட்டன் தொடர்ந்து உதவியளித்துவரும் என்று தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் மலர்



சிந்தனை விருந்து

## தாயே இது சத்தியம்!

சந்திரன் தனது பால் நிலவுக் கரங்களால் உலகைத் தழுவிக் கொண்டிருந்தான். அப்பால் நிலவிலே கருங்கடலின் அலைகள் வெள்ளிக் கம்பிகள் போல் காட்சி கொடுத்துக் கொண்டிருந்தன. தன் ''காதலனுகிய தண்மதியை அணைப்பதற்கு சமுத்திர மங்கை தன் அலைக் கரங்களை நீட்டிக்கொண்டிருந்தாள். இதற்கிடையே நிலவொளியுடன் போட்டியிட்டுக் கொண்டு கடலின் கரையிலே பரந்து கிடந்தது வெண் மணல். இதயத்திலே கிடந்த இருளடைந்த எண்ணங்கள் காற்றிலே மிதக்கவிட்டு அம்மணலிலே உட்கார்ந்தேன் கடலிலிருந்துகுளிர்ந்த காற்று ''ஜில்'' என்று வீசியதால் நான்இயற்கை யின்பத்தில் மூழ்கியிருந்தேன். நான் என்னையே மறந்து விட்டேன்....

பின்னுலிருந்து ''எழுந்திரடா தமிழா'' என்ற கம்பீரமான குரல் ஒன்று கேட்டது. தடாலென எழுந்து திரும்பிப் பார்த்தேன். என் கண்களையே என்னுல் நம்பமுடியவில்லை! குலைத்து விட்ட கூந்தல், களைபொருந்திய முகம், நெற்றியிலே மஞ்சளும் குங்குமமும் பொருந்திய பெண்ணொருத்தி கண்ணீரும் கம்பலையுமாக என்முன் நிற்கக் கண்டேன்.

''என்ன தம்பி விழிக்கிருய்? என்னைத் தெரியவில்லையா? நான் தான் உனது அன்னை. உனக்குமட்டமல்ல, தமிழ் சமுதாயத்திற்குங் கூடத்தான். என் பெயர் ''தமிழ்அன்னை'' என மொழிந்தாள். அன்னையின் கோலம் கண்டு பதறினேன். அவள் தொடர்ந்தாள்: ''தம்பி நீ சிறுவன் உனக்கு என்நிலை தெரியாது. அன்று சங்கப் புலவர்களால் போற்றிப் புகழப்பட்டேன். என் புகழ் எட்டுத் திசையும் பரவியிருந்தது. தாரணி போற்றும் தையல் எனக் கருத்தில் கொண்ட சங்கப்புல

**க. கனகலிங்கம்**

வர்கள் என்னை அரியணை ஏற்றிஞர்கள். ஆனுல் இன்று சொந்தநாட்டில் தூற்றப்பட்டேன், அரியணை யிழந்தேன். அடிமை விலங்கு பூட்டப்பட்டேன். எனது இடத்தை வேறொருத்தி கவர்ந்து விட்டாள். இதற்கெல்லாம் காரணம் யார் தெரியுமா தம்பி? நான் பெற்ற பிள்ளைகள் தான் காரணம். அந்நிய நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் என் பிள்ளைகளிடம் குடிகொள்ள ஆரம்பித்ததால் நான் உதாசீனப்படுத்தப்பட்டேன்'' என்று கண்ணீர்மல்க மொழிந்தாள்.

எனக்கும் அழுகை வந்தது. நான் அழுவதைக் கண்டு சிரித்தாள். வானத்து நட்சத்திரங்களும் சிரித்தன. அலைகடலும் சிரித்தது. ''நான் பெற்ற குழவிகள் மானமொன்றே பெரிதெனக்கொண்டு வாழும் பண்புள்ளவர்களெனப் பெருமிதம் கொண்டிருந்தேன். அவைகள் எல்லாம் இன்று கானல்நீராக மாறி, பதவிக்கும், பணத்திற்கும் மானத்தை அடைகுவைக்கும் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. இந்நிலை நீடிக்குமாஞல் இந்நாட்டை விட்டு விரைவில் மறைந்துவிடுவேன்'' என்று ஆவேசத்துடன் கூறி ஓடிஞள்.

நிலைகண்டு பதறிய நான் ''அம்மா, உங்களை மீண்டும் அரியணையேற்றித் தாரணி போற்றிப் புகழவைக்கும் பொறுப்பு என்போன்ற இளைஞர்களது பொறுப்பு. குலைத்துவிட்ட கூந்தலை முடிக்கவைத்து, வேதனைக் கண்ணீருக்குப் பதில் ஆனந்தக் கண்ணீர் சொரியவைப்போம். செந்தமிழ்த் தாயே இது சத்தியம். நீங்கள் விட்டு நீங்கிஞல் நாங்கள் தாயற்ற பிள்ளைகளா?'' என்று கூறித் தொடர்ந்தேன்.

'தடால்' என்று தரையில் விழுந்தேன். தலையிலோ பலமான அடி. என் அன்புச் சகோதரி ''அண்ணு, தலைவலிக்கிறதா'' என்று கேட்டுக் கொண்டு [illegible] சிரித்தாள். அப்பொழுது தான் நினைத்தேன். தமிழன்னையைக் காணவுமில்லை; பேசவுமில்லை. நான் கண்டது கனவென்று. நேரமும் அப்பொழுது பகலாகத் தான் இருந்தது. தடுத்து நிறுத்திய சுவர் சிரித்தது. பதிலுக்கு நானும் சிரித்தேன். கனவிலாவது எனது 'மொழி அன்னை' யைக் கண்ட 'திருப்தி' என் இதயத்திலே நிறைந்துகிடந்தது.

## அலிபாபாவின் அனுபவங்கள்

— மாஸ்டர் சிவலிங்கம் —

சிறிது நேரத்தில் ... ... எங்கோ சென்று வீடு திரும்பிய அடிமைப்பெண் மோஸியாஞ வாசற்கதவில் இடப்பட்டுள்ள நவீன அடையாளத்தை எப்படியோ அவதானித்துவிட்டாள். ஏதோ விபரீதம் நடக்கப்போகிறது என அவளுடைய உள்மனம் அறிவுறுத்தியது. புத்திக் கூர்மைமிக்க அவள் வெண்கட்டித் துண்டொன்றை எடுத்து காசிமின் வீட்டிற்கு இரு புறத்திலுமுள்ள பல வீட்டுக்கதவுகளில்அதே போன்ற அடையாளத்தைப் பொறித்துவிட்டாள்.

குகையை அடைந்த முரட்டுத்திருடன் தனது வீரதீரத்தைக்கூறி எல்லோரது ஏகோபித்த பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டான். சிறிதுநேர ஆலோசனைக்குப் பின்பு தலைவன் தன்னுடன் ஒரு திருடனை அழைத்துக் கொண்டு, அடையாளமிடப்பட்ட வீட்டைப் பார்ப்பதற்காக மாறு வேடத்தில் நகரை அடைந்தான், குறிப்பிட்ட அந்தத் தெருவை அடைந்ததும் அப்படியே பிரமித்துப்போய் நின்றனர். காரணம் ... !

பத்துப் பதினைந்து வீடுகளில் ஒரேவிதமான அடையாளமிடப்பட்டிருந்தது. தலைவனுக்கு ஒன்ன செய்வதென்றே புரியவில்லை. ஆத்திரத்தில் பற்களை நறுநறுவெனக் கடித்தபடிகுகைக்கு விரைந்தான். குகையுள் நுழைந்ததும் .. செய்திகூறிய திருடனுடைய தலையை வெட்டி வீழ்த்திஞன்!

அடுத்தநாள் ... திடசித்தமுள்ள திருடனெருவன் உண்மையை அறிந்து வருவதாகக்கூறி மாறு வேடத்தில் நகரை அடைந்தான். பேராசைக்காரக் கிழவனின் உதவியுடன் காசிமின் வீட்டை அடையாளங்கண்டு வீட்டுக் கதவில் சிவத்த மையிஞல் ஒருவித அடையாளமிட்டு விட்டுக் குகையை அடைந்தான்.

அந்த விசித்திர அடையாளத்தை அவதானித்த மோஸியாஞ, சிவப்பு வர்ணத்திஞல் அப்பகுதிகளிலுள்ள பல வீட்டுக்கதவுகளில் திருடன் வரைந்த அடையாளத்தைப் போன்று பொறித்துவிட்டாள். திருடர்தலைவன் நகடுக்கு வந்து அவதானித்தபோது பலவீட்டுக் கதவுகளில் ஒரேவிதமான அடையாள மிடப்பட்டிருப்பதைக் கண்டு ஏமாற்றமடைந்துகுகைக்குச் சென்று மற்றத்திருடனையும் வெட்டி வீழ்த்திஞன். பின்பு தலைவனே மாறு வேடத்தில் நகரைஅடைந்து முஸ்தபாக் கிழவரின் உதவியுடன் காசிமின்வீட்டை நன்கு அவதானித்துக்கொண்டான்.

குகையை அடைந்ததும் — எல்லோரையும் அழைத்து, ''நீங்கள் சிறுசிறுகுழுக்களாகப் பிரிந்து நகரத்திற்குச்சென்று சில கழுதைகளும் முப்பத்தியெட்டுப் பீப்பாக்களும் வாங்கிக் கொண்டு, ஒரு பீப்பாவில் மட்டும் நிறைய எண்ணெய் வாங்கிவரவேண்டும்.'' என்று உத்தரவிட்டான்.

ஒருசில தினங்களில் குழுவினர் சில கோவேறு கழுதைகளுடனும் பீப்பாக்களுடனும் குகையை அடைந்தனர். ஒரேயொரு பீப்பாவில் எண்ணெய் நிறைந்திருந்தது. தலைவனுக்கு ஒரே உற்சாகம் கரைபுரண்டு ஓடியது! 'சபாஸ்' போட்டு எல்லோரையும் பாராட்டிஞன். அடுத்தநாள் ... !

தலைவனின் திட்டப்படி ஆயுதந்தாங்கிய ஒவ்வோர் திருடனும் ஒவ்வோர் பீப்பாவிற்குள் பதுங்கிக்கொண்டனர். முப்பத்தியேழு பீப்பாக்களிலும் திருடர்கள் பதுங்கிக்கொண்டதும் ... . சுவாசிப்பதற்கான வசதியுடன்கூடியமூடிகளிஞல் இறுக்கிப் பூட்டப்பட்டன. மூடிகளின்மேல் எண்ணெய் தடவப்பட்டது. ஒரேயொரு பீப்பாவில் மட்டும் எண்ணெய் நிறைந்திருந்தது. திருடர்தலைவன் எண்ணெய் வியாபாரிபோல உடையணிந்துகொண்டு பீப்பாக்களைக் கழுதைகளில் ஏற்றியபடி மாலைநேரத்தில் நகரை வந்தடைந்தான்.

காசிமின் வீட்டை அடைந்து கதவில் பலமாகத் தட்டிஞன். ஏற்கனவே அங்கு குடியேறியிருந்த அலிபாபா ஓடிவந்து கதவைத் திறந்தான், ''மன்னிக்கவேண்டும் ... தங்களுக்குச் சிரமம் கொடுத்துவிட்டேன்...'' என்ற பீடிகையுடன் ஆரம்பித்துத் தானெரு அயலூர் எண்ணெய் வியாபாரி என்றும், அடுத்தநாள் சந்தைக்குச் செல்லும்வரை அலிபாபாவின் வீட்டில் தங்குவதற்கும்அனுமதி கேட்டான். திருடர் தலைவனின் கபட வேடத்தைப் புரிந்துகொள்ளாத அலிபாபா மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டான்.

(தொடரும்)

## பறக்கும் தட்டுகளுக்கு பல்வேறு வடிவங்கள் உண்டு

— மகான் —

கடந்த இரு வாரங்களாக நாம் பறக்கும் தட்டின் 'மர்மம்' பற்றி இங்குஆராய்ந்தோம். இப்பொழுது மேலும் அதுகுறித்து கவனிப்போம்,

பறக்கும் தட்டுகள் முதற் தடவையாக 1947-ம் ஆண்டில்தான் மனிதர்களின்கண்களுக்கு காட்சி கொடுத்தன என்று நான் இங்கு குறிப்பிட்டிருந்ததை இரு வாசகர்கள் மறுத்து எழுதியுள்ளனர். பறக்கும் தட்டுகளை முதலில் கண்டவர்கள் விஞ்ஞானிகளுமல்ல இராணுவ அதிகாரிகளுமல்ல. அமெரிக்க பிரபல வர்த்தகரான கென்னத் ஆர்னேல்ட் என்பவர்தான் முதற்தடவையாக இவற்றைக் கண்டதாகக் கூறப்படுகிறது, 1947-ம் ஆண்டு ஜூன் மாதம் 24-ம் திகதி இவர் விமானமொன்றில் வாஷிங்டன்மீதாக பறந்து சென்று கொண்டிருக்கையில் சுமார் பத்து ''பொருள்கள்'' வானத்தில் மணித்தியாலத்துக்கு ஆயிரம் மைல் வேகத்தில் பறந்து சென்றுகொண்டிருப்பதைக் கண்ணுற்ருர், இவை விமானங்களல்ல. ஒருவித ''தட்டுகள்'' என்பதை அவர் அறிந்திருந்தார். தட்டுகள் மாதிரி அவை காட்சியளித்திருந்ததைத் தொடர்ந்தே ''பறக்கும் தட்டுகள்'' என்ற பெயர் வெளியாயிற்று. இப்பெயருக்கும் அவரே காரணமாக இருந்தார், ஆனுல் பறக்கும் தட்டுகள் எல்லாம் ஓரேமாதிரி இல்லை என்று இப்பொழுது விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

1948-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் லெப்டினன்ட் கோர்மன் என்ற விமானி விமானமொன்றில் பறந்து சென்றபொழுது ஒருவித ஒளியைக் கண்டு திகைப்புற்று பூமியிலுள்ள கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்குஅறிவித்தார். ஆனுல் அவை கடைசிவரை ஒளிமயமாகவே காட்சி கொடுத்து மறைந்துவிட்டதாம்!

பறக்கும் தட்டுகள் சுருட்டுகளைப் போலவும் ஐஸ்கிரீம் 'கோன்' போலவும் ஒருவித தட்டுப்போலவும், வட்டம் போலவும், உருளை போலவும் வடிவம் கொண்டுள்ளன என்று இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இவற்றின் வேகம் மணிக்கு 18,000 மைல் தூரமாம்! அப்படி என்ருல் மனிதனுல் அமைக்கப்படும் விமானங்கள் அந்த வேகத்தில் பறந்தால் நிச்சயம் எரிந்துவிடும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். பறக்கும் தட்டுகளின் நீளம், உயரங்களிலும் பெரும் வித்தியாசங்கள் இருக்கின்றன. கோர்மன் கண்ட பறக்கும் தட்டின் (ஒளி வடிவமானது) விட்டம் சுமார் ஆறு அங்குலமாகும். ஆனுல் 1948-ல் மான்ரெல் என்ற விமானி கண்ட பறக்கும் தட்டின் நீளம் 500 முதல் 1000அடிகளாகும். இதிலிருந்து பறக்கும் தட்டுகளின் அமைப்புகளும் அதன் வேகங்களும் வித்தியாசம் கொண்டவை என்பது நன்கு புலனுகின்றது. ஆனுல் இவை எதனுல் செய்யப்பட்டிருக்கின்றன என்பது இன்னும் புதிராகவே இருந்து வருகிறது.

பறக்கும் தட்டுகள் எப்பொழுது பூமிக்கு வரும்? அவை எங்கிருந்து வருகின்றன? ஏன் அவை இங்கு வருகின்றன என்று சில ருசிகரமான தகவல்களை அடுத்த கட்டுரையில் ஆராய்வோம்.

## கொல்லிமலைச் சாரலிலே...!

"ஜாக்கி"

''ஐயா, துப்பறிவாளரே! என்னைப் பிடிப்பதற்காக, நீர் மிகவும் கஷ்டப்படுகின்றீர். துப்பறிவதில் நீர் திறமைசாலியாக இருக்கலாம். ஆனுல் என் விஷயத்தில்மட்டும்... என்னைச் சுலபமாக மடக்கிவிடலாம் என்று கனவு காணுதீர்கள். அந்த எண்ணத்தை விட்டுவிடும். இல்லையேல், உங்களுக்கு என்ன நடக்கும் என்றே என்னுல் கூற முடியாது. —'ஜாக்கி'-'' என்ெருரு கடிதம் வைக்கப்பட்டிருந்தது!

கடிதத்தைப் படித்து முடித்த பாஸ்கர் அதைப் பத்திரப்படுத்திஞர். அவர் முகத்தில் ஆத்திரக் குறியோ, அச்சக்குறியோ தென்படவில்லை. எவ்விதச் சலனமுமின்றி வழமைபோலவே இருந்தது அவர் முகம்.

தனது அலுமாரிக்குள்ளிருந்து ஒரு கறுப்பு அங்கியை எடுத்துவைத்தார் சி. ஐ. டி. பாஸ்கர். 'சைலன்சர்' பொருத்தப்பட்ட தனது கைத்துப்பாக்கியில் நிறைய குண்டுகளை அடைத்தார். ரப்பரினுலான காலணிகளையும், வேறு சில பொருட்களையும் எடுத்துக் கொண்டு அலுமாரியைப் பூட்டிஞர்...

ஆதவனின் அருங்குணத்தால், ஒளி மயமாகி நின்ற உலகத்தைக் கொடிய இருளரக்கன் சிறிது சிறிதாக அணுகிக் கொண்டிருந்தான். இராப் போஜனம் முடிந்ததும், தாம் மாலையில் எடுத்து வைத்த பொருள்களை சரிபார்த்துவிட்டு, கறுப்பு அங்கியை அணிந்துகொண்டு மோட்டார் சைக்கிளில் வெளியே புறப்பட்டார் சி. ஐ. டி. பாஸ்கர். சி. ஐ. டி. பாஸ்கரின் மோட்டார் சைக்கிள், கொல்லிமலைக் காட்டை அடைந்ததும். சைக்கிளின் முன் விளக்கை அணைத்துவிட்டு, வண்டியை மிகவும் மெதுவாகச் செலுத்தத் தொடங்கிஞர். ஆமாம், நிசப்தமான அவ்வேளையில் சைக்கிளின் சிறு சப்தங்கூட பெரிதாகக் கேட்டது.

ஒரு பற்றை மறைவில் தனது மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு, சிறிது நேரம் அங்குமிங்கும் சி. ஐ. டி. பாஸ்கர் உலாவிஞர். மணி பதிஞென்றேமுக்கால் என்பதை, ரேடியம் பூசப்பட்ட கைக்கடிகாரம் காட்டிக்கொண்டிருந்தது. அடிமேலடி வைத்து மலையை நோக்கி நடந்தார் சி. ஐ. டி. பாஸ்கர்! அங்கொன்றும் இங்கொன்றுமாக, ஆகாய வீதியில் பரந்துகிடந்த வானத் தாரகைகளின் சிறு வெளிச்சத்தைத்தவிர வேறு ஒளியே இல்லை. அவ்விருட்டில் தட்டுத்தடுமாறி, ஒரு படியாக கொல்லிமலையில் உள்ள சமதரையை அடைந்தார்.

(தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டுக்கோட்டை வட்டார பாடசாலைகள்

# கலைநிகழ்ச்சி போட்டி முடிவுகள்

சுழிபுரம், திங்கள் வட்டுக்கோட்டை வட்டார பாடசாலைகளின் கலை நிகழ்ச்சிப்போட்டிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. சி. தணிகாசலம் தலைமையில் நடைபெற்றன. வட்டார வித்தியாதிகாரி திரு. ச. சபாபதி வரவேற்புரை நிகழ்த்தினர், போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பரிசுகள் வழங்கினர்.

போட்டி முடிவுகள்.

**பாட்டு**

'ஏ' பிரிவு: அரசினர் விக்ரோறியாக்கல்லூரி சுழிபுரம். இந்துக்கல்லூரி, வட்டுக்கோட்டை. பெண்கள் உயர்நிலைப் பாடசாலை, பண்டத்தரிப்பு,

'பி' பிரிவு: பண்ணுகம் வடக்கு அ. மி. பாடசாலை. சுழிபுரம் கிழக்கு அ. மி. பாடசாலை, தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாசாலை.

**அபிநயப்பாட்டு**

பண்ணுகம் மெய்கண்டான் பாடசாலை, சுழிபுரம் ஐக்கியசங்க வித்தியாசாலை.

**கும்மி அடித்தல்**

அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை, பொன்னாலை வரதராசப்பெருமாள், களபூமி அமெரிக்கன் மிஷன் பாடசாலை, காரைநகர்.

**கிராமிய நடனம்**

'ஏ' பிரிவு: பண்ணுகம் வடக்கு அ. மி. பாடசாலை, சில்லாலை ஆர். சி. பெண் பாடசாலை, அராலி சரஸ்வதி வித்தியாசாலை.

'பி' பிரிவு: சிவப்பிரகாச வித்தியாசாலை, சங்கானை, பண்ணுகம் மெய்கண்டான் பாடசாலை, சங்கரத்தை சின்னம்மா பாடசாலை.

**நாடகம்**

'ஏ' பிரிவு: வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி.

'பி' பிரிவு: வட்டுப்பிளவத்தை அ. மி. பாடசாலை, சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை, வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர்,

## இடமாற்றம்

கிளிநொச்சி, திங்கள் கரைச்சிக் காரியாதிகாரி பிரிவின் கீழ் கிராமசேவையாளராகக் கடமையாற்றிய திரு. எஸ். இராசகதிரவடிவேல் நெடுந்தீவுக்கும், திரு. எஸ். கணபதிப்பிள்ளை கீரிமலைக்கும் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

REGAL - JAFFNA
NOW SHOWING
Richard Harrison
in
THE PITILESS 3
(Totalscope color)

வெற்றிகரமான 2-வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) மொடேர்ன் (பதுளை)
விஜிதா (ஹட்டன்) திவொளி (நுவரெலியா) கல்யாணி (நாவலப்பிட்டி)
லக்ஷ்மி (இரத்தினபுரி) அயன் (மன்னர்)



எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
மற்றும் பலர் நடிக்கும்
நீதிக்குப் பின் பாசம்

இலங்கையின் . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ண்டியதொன்று. வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து எந்த நாடும் போராடலாமென்ற உறுதியை உலகநாடுகளுக்கு ஏற்படுத்திக் கொடுத்தது மகாத்மாவின் இந்திய சுதந்திரப் போராட்டந்தான்.

பாரதம் இன்று உலகத்துக்கே ஒரு வழிகாட்டியாக இருந்துவருகிறது.''

உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், திருவாளர்கள்: ச. அம்பிகைபாகன் எஸ். சுப்பிரமணிய ஐயர், எஸ்.கே. நேசையா, எம். சர்க்கரை ஆச்சாரியார், திருமதி சத்தியதேவி துரைசிங்கம் உட்பட வேறுபலரும் பேசினர்,

விளையாட்டுப் போட்டி

## 'இராசரத்தினம்' வென்றது

யாழ்ப்பாணம், திங்கள் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி வடபிரதேச உடற்பயிற்சி வித்தியாதரிசி திரு. ஆர். எஸ். சீவரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது இராசரத்தினம் இல்லம் 166 புள்ளிகளைப்பெற்று சாம்பியன் கோஷ்டியாகத் தெரிவுசெய்யப்பட்டது. கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடந்த இப்போட்டியில் சம்பந்தர் இல்லம் 915 1/2 புள்ளிகளையும் இராமநாதன் இல்லம் 148 1/2 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன. திருமதி சீவரத்தினம் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கினர்.

இவ்விளையாட்டுப்போட்டியில் பிரிவுச்சாம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டோர்களின் பெயர்கள் பின்வருமாறு:-

மேற்பிரிவு (ஆண்) செல்வன் ப. புண்ணியசிங்கம் (சம்பந்தர் இல்லம்) மேற்பிரிவு (பெண்) செல்வி கு. ஜெயமணி (சம்பந்தர் இல்லம்) மத்தியபிரிவு (ஆண்) செல்வன் ந. சிவபாலன் (இராமநாதன் இல்லம்) மத்தியபிரிவு (பெண்) செல்வி ச. பாக்கியலட்சுமி (இராசரத்தினம் இல்லம்) கீழ்ப்பிரிவு (ஆண்) செல்வன் ந. தவபாலன் (இராசரத்தினம் இல்லம்) கீழ்ப்பிரிவு (பெண்) செல்வி அ. நாகேஸ்வரி (இராசரத்தினம் இல்லம்)

மூன்று இல்லங்களுக்கிடையில் நடைபெற்ற போட்டிகள் சிலவற்றின் முடிவுகள்:-

(நீளம்பாய்தல் மேற்பிரிவு ஆண்) ப. புண்ணியசிங்கம்; சி. நிரஞ்சன்; தா. தவசோதி.

(உயரம்பாய்தல் மேற்பிரிவு ஆண்) ப. தெய்வேந்திரம்; தா. தவசோதி; ந. கீர்த்திராசா

100 மீற்றர் ஓட்டம் மேற்பிரிவு (ஆண்) ப. புண்ணியசிங்கம், ப. தெய்வேந்திரம், சி. சண்முகரத்தினம்.

220 மீற்றர் மேற்பிரிவு (ஆண்) ப. புண்ணியசிங்கம், ப. தெய்வேந்திரம், சி. சண்முகரத்தினம்.

4×220 மீற்றர் அஞ்சல் ஓட்டம் மேற்பிரிவு (ஆண்) சம்பந்தர் இல்லம், இராமநாதன் இல்லம், இராசரத்தினம் இல்லம்,

மத்தியபிரிவு ஆண்கள் (நீளம் பாய்தல்) ந. சிவபாலன், த. பேரின்பநாயகம், இ. சண்முகலிங்கம்.

மத்தியபிரிவுஆண்கள்(உயரம் பாய்தல்) க. பரமநாதன், அ. யுகிர்தராசா, இ. சண்முகலிங்கம், சி. ரிஷ்யசிருங்கர். (100 மீற்றர் ஓட்டம்) ந. சிவபாலன், செ, சிங்காசனம், அ. யுகிர்தராசா, (220மீற்றர் ஓட்டம்) நா. சிவபாலன், செ. சிங்காசனம், இ. செல்வராசா, (4×10 மீற்றர் அஞ்சல் ஓட்டம்) இராசரத்தினம் இல்லம், இராமநாதன் இல்லம், சம்பந்தர் இல்லம்.

கீழ்ப்பிரிவு ஆண்கள் (நீளம் பாய்தல்) க. நல்லைநாதன், பொ. கணேசலிங்கம், இ, துரைராசா, (உயரம் பாய்தல்) க. நல்லைநாதன், ந. தவபாலன், இ. துரைராசா. (100 மீற்றர் ஓட்டம்) பொ. கணேசலிங்கம், ந. தவபாலன், ந. அமிர்தலிங்கம். (150 மீற்றர் ஓட்டம்) ந. தவபாலன், பொ. கணேசலிங்கம், க. நல்லைநாதன். (அஞ்சல் ஓட்டம்) சம்பந்தர் இல்லம், இராசரத்தினம் இல்லம். இராமநாதன் இல்லம்.

மேற்பிரிவுபெண்கள் (100 மீற்றர் ஓட்டம்) செ. இராசபூபதி, மு. மங்களேஸ்வரி, மு. சுகர்தமணி. (கயிறடித்தல் 75 மீற்றர்) கு. ஜெயமணி, ச. கமலாம்பிகை, ப. சரஸ்வதியம்மா. (நிதான ஓட்டம்) கு. ஜெயமணி, மா பத்மாதேவி, மு. சுகிர்தமணி. (220 மீட்டர் ஓட்டம்) கு. ஜெயமணி, செ. இராசபூபதி, வை. சிவபாக்கியம், (அஞ்சல் ஓட்டம்) 4×110 மீற்றர் சம்பந்தர் இல்லம், இராமநாதன் இல்லம், இராசரத்தினம் இல்லம்.

மத்திய பிரிவு பெண்கள் (100 மீட்டர் ஓட்டம்) ச. பாக்கியலட்சுமி, மு. ஜெயலட்சுமி, ச. சுபத்திரா. (நிதான ஓட்டம்) சி. செல்வராணி, மு. விஜயலட்சுமி, ம. கலைமணி. (கயிறடித்தல் 75 மீற்றர்) ச. பாக்கியலட்சுமி, மு. விஜயலட்சுமி, ச. சுபத்திரா. (150 மீற்றர் ஓட்டம்) ச. பாக்கியலட்சுமி ச. சுபத்திரா, (ம. புவனராணி, மு. விஜயலட்சுமி மூன்ரும் இடம்) (அஞ்சல் ஓட்டம் 4×10 மீற்றர்) இராசரத்தினம் இல்லம், இராமநாதன் இல்லம், சம்பந்தர் இல்லம்.

கீழ்ப்பிரிவு பெண்கள், (80 மீற்றர் ஓட்டம்)அ. நாகேஸ்வரி, செ. சரோஜினி, வே, தவமணி,. (100மீட்டர் ஓட்டம்:) க. புஷ்பராணி, அ. நாகேஸ்வரி, செ. சரோஜினிதேவி, (கயிறடித்தல்:) அ. நாகேஸ்வரி, கு. நவமணி, வே. தவமணி, (பைலட்ஓட்டம்:) சம்பந்தர் இல்லம், இராசரத்தினம் இல்லம், இராமநாதன் இல்லம், (அஞ்சல் ஓட்டம் 4X119 மீற்றர்) சம்பந்தர் இல்லம், இராசரத்தினம் இல்லம், இராமநாதன் இல்லம்.

விநோத உடைப் போட்டி, செல்வன் செ. சிவானந்தன், செல்வி சி. தனலட்சுமி, செல்வன் செ. சிங்காசபை.

இல்லப் பந்தல் அலங்காரம்: முதலாம் இடத்தை இராமநாதன் இல்லமும், சம்பந்தர் இல்லம், இராசரத்தினம் இல்லம் இரண்டாம் மூன்ரும் இடத்தையும் பெற்றுக்கொண்டன. இவ்விளையாட்டுப் போட்டியில் நல்லூர் வட்டார வித்தியாதரிசி அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

## வரி விளம்பரம்

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் மெயின் வீதி 142-ம் இலக்கத்தை யுடைய 2 1/2 பரப்புக் காணியும், வீடும் விற்பனைக்கு உண்டு. 18-8-65 திகதிக்கு முன் மேற்குறிப்பிட்ட முகவரியில் சந்திக்கவும். அதற்குப் பின்னர் தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்: . [illegible]. [illegible]aris-nayagam, [illegible]uddhadasa & Co; Colombo-10. 780

**விற்பனைக்கு**

3 1/2 டொன் ஓஸ்டின் லொறி பொடி ஒன்று நல்ல நிலைமையில் விற்பனைக்கு உண்டு. மில்க்வைற் சோப் தொழிற்சாலை, 527, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233 784

பருத்தித்துறை தாளையடியைச் சேர்ந்த உடுத்துறையில் 20 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. தென்னைச் செய்கைக்கு ஏற்றது.
நாதன், 66, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 783

**தேவை**

இலங்கையில் பிரசித்தி பெற்ற ஸ்தாபனத்திற்கு ஸ்ரோர்கீப்பர்கள் பிணை ரூ. 3000/- சம்பளம் ரூ. 150/-. காஷியர்கள் பிணை ரூ. 2000/- சம்பளம் ரூ. 125/-. தட்டெழுத்தாளர்கள் பிணை ரூ. 1000/- சம்பளம் 75/- தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 778, ஈழநாடு மேற்பார்த்து. 778

திறமையான ஒருசோடி மேசனுக்கும், இரு கூலியாட்களுக்கும் வேலைதேவை. வ. கந்தசாமி, பெ.ச. கடையடி, மாதகல். 782

**கல்வி**

B A;, B. Sc Special & General G A Q, G S Q G C E; (A/L & O/L- Arts & Science- December 1965 Examination Rapid Revision Special course & 1965 Examinations வகுப்புகள் பண்டிதமணி உயர்திரு சி. கணபதிப்பிள்ளை அவர்களால் ஆரப்பிக்கப்பட்டு ஒழுங்காக நடைபெறுகின்றன. தூர இடங்களிலுள்ளவர்களுக்காக பாடசாலை 3 தவணை விடுமுறை காலை வகுப்புக்கள் 12-7-65 தொடக்கம் ஷெ பரீட்சைகள் எல்லாவற்றுக்கும் நடைபெறுகின்றன, பாடங்களைத் தவற விடாமல் இருப்பதற்கு உடனே சேருதல் நல்லது. விடுதி வசதியுண்டு. விஞ்ஞான மாணவர்களுக்கு ஆய்வு கூடப் பயிற்சி வசதிகளும் உண்டு. முத்திரை ஒட்டிய உறையுடன் விண்ணப்பஞ் செய்க. கா. க. காசிப்பிள்ளை, கௌரவ பதிவாளர், வடபிரதேசக் கல்விக் கழகம், நமசிவாய வித்தியாலயம், கொட்டடி, யாழ்ப்பாணம். 779

**ஜி. சி. இ. (சாதாரணம்) வகுப்புகளில் சில இடங்களே காலியாக உள்ளன. தாமதிக்காமல் சேருங்கள். யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி 107, பருத்தித்துறை ரேட், நல்லூர், யாழ்ப்பாணம். 725**

**தொய்வு, கசம், நீரிழிவு**

**வெள்ளை** முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம். 771

## மகில சமதி கிளை

குரும்பசிட்டி, திங்கள் தென்னிலங்கைப் பகுதியில் மிகவும் சிறப்பாகநடைபெற்றுவரும் லங்கா மகில சமதி இயக்கத்தினரின் கிளையொன்று யாழ்ப்பாணத்தில் வெகுவிரைவில் நிறுவப்பட இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க ஊழியரும் உத்தியோகமொழியும்

## மந்திரிசபை முடிவு விபரம்

கொழும்பு, ஞாயிறு

அரசாங்க ஊழியரும், உத்தியோக மொழியும் என்பது பற்றிய மந்திரி சபை முடிவு சம்பந்தமான சுற்றறிக்கை விபரம் வருமாறு:-

### பழைய ஊழியர்கள்

(1) உத்தியோக மொழிச் சட்டத்திற்கு முன் அரசாங்க சேவையில் சேர்ந்த ஒரு ஊழியரை, அவர் வேலை செய்யும் மொழியாக சிங்களத்தை ஏற்கும்படி கட்டாயப்படுத்த முடியாது.

(2) இந்த ஊழியர்கள் வேலையைவிட்டுச் செல்ல வேண்டிவந்தால் அவர்கள் நஷ்டஈட்டுடன் ஒய்வு பெற அனுமதிக்கப்படக்கூடாது. அவர்களின் ஒய்வுக்காலம் வரை அரசாங்கத்தின் கீழ் ஆங்கிலத்தில் வேலைசெய்ய தகுதியான வேலைகள் அளிக்கப்படவேண்டும்.

(3) எதுவாயினும் இந்த அதிகாரிகள் ஒய்வுபெறுவதற்கு மனுச்செய்ய அனுமதிக்கப்படவேண்டும். அவருக்கு அனுமதி வழங்கப்பட்டால், நஷ்டஈடின்றி ஒய்வுபெற அவர் அனுமதிக்கப்பட வேண்டும்.

(4)(அ) 55 வயதை எட்டாத ஊழியர்களும், ஒய்வு பெறும்படி நோட்டீஸ் வழங்கப்பட்ட ஊழியர்களும் சேவையில் நீடிக்க அனுமதிக்கப்படவேண்டும். அவர்களுக்கு பிறப்பிக்கப்பட்ட ஒய்வு உத்தரவு வாபஸ்பெறப்படவேண்டும்.

(ஆ) 55 வயதை அடைந்து, சிங்களத்தில் போதுமான தகுதி பெருத காரணத்தினல் ஒய்வுபெறுமாறு உத்தரவிடப்பட்ட ஊழியர்கள் விஷயம் அவர்களது சிங்களத்தகுதியை கருத்தில்கொண்டு ஆராயப்படவேண்டும்.

(5) சிங்களத்தில் போதுமான தகுதிபெருத காரணத்தினல் சம்பள உயர்வு தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கும் பழைய அரசாங்க ஊழியர்களுக்கு, சம்பள உயர்வை திருப்பிக்கொடுக்கவேண்டும்.

(6) பழையஅரசாங்க ஊழியர்களுக்கு மொழிபெயர்ப்பு போன்ற விஷயத்தில் உதவிசெய்யும் பொருட்டு சிங்கள அறிவுள்ள மேலதிக ஊழியர்கள் திரட்டப்படவேண்டும்.

(7) சகல அரசாங்க ஊழியர்கள் விஷயத்திலும் உத்தியோகமொழி அமுல் எவ்விதம் சம்பந்தப்படுத்தப்படுகிறது என்பதை விளக்கி நிதி அமைச்சு ஒரு சுற்றறிக்கையை வெளியிடவேண்டும்,

### புதிய ஊழியர்கள்

(8) உத்தியோக மொழி விஷயத்தில் ஒருவர் புதிய ஊழியரா அல்லது பழைய ஊழியரா என்பதைத் தீர்மானிக்கும் திகதி 24-9-56 என இருக்கும்.

(9) அரசாங்கசேவைபோட்டிப்பரீட்சையில்ஆஜராகும் எந்தத் தராதரம் உள்ள ஊழியரும், அவர் தகுதி பெற்றிருக்கும் மொழியில் பரீட்சை எழுத அனுமதிக்கப்படவேண்டும். பதவிஉயர்வுப்பரீட்சைக்கும் அதே மொழியில் எழுதுவதற்கு அனுமதிக்கப்படவேண்டும்.

(10) 1-7-65க்குப்பின் அரசாங்கசேவையில் பிரவேசிக்கும் ஊழியர் விஷயத்தில் கீழ்க்கண்ட நடைமுறைகள் பின்பற்றப்படும்.

(அ) தமிழ் அல்லது ஆங்கில மொழியில் சேவைக்கு எடுக்கப்பட்டிருக்கும் சகல ஊழியர்களும் உத்தியோக மொழியான சிங்களத்தில் திருப்திகரமான முறையில் கடமையாற்றும் வகையில் மூன்றுவருடத்தில் போதுமான தகுதிபெற்றிருக்க வேண்டும். தங்கள் கடமைகளைச்செய்ய சிங்களம் தேவையில்லாத ஒரு சிலர் விஷயம் இந்த விதியில் அடங்காது.

(ஆ) உத்தியோகமொழியில் சேவைக்கெடுக்கப்பட்ட ஊழியர்கள் விஷயத்திலும் இந்த விதி கடைப்பிடிக்கப்படும்.

(11) 24-9-56க்கும் 30-6-65க்கும் இடையில் நியமனம் பெற்ற ஊழியர்கள் 3 வருடத்தில் சிங்களத்தில் சிறந்தமுறையில் வேலைசெய்யும் தகுதியைப் பெற்றிருக்கவேண்டும். சிங்களம் தேவைப்படாத ஒருசிலர் விஷயத்தில் இவ்விதி இருக்காது. சிங்களத்தில் தகுதிபெற்றதும் அவர்கள்சேவையில் நிரந்தரமாக்கப்பட்டு, சம்பளஉயர்வுக்கு தகுதி பெறுவார்கள்.

(12) எதிர்காலத்தில் அரசாங்கசேவைக்கு திரட்டப்படும் ஊழியர்கள் உத்தியோகமொழிச்சட்டத்தை அமுல்நடத்தும்வகையில் கட்டுப்படுத்தப்பட்ட ஓர் நிபந்தனையை ஏற்படுத்தவேண்டும்

(13) 1965-ம் ஆண்டு மத்திய குமாஸ்தாக்கள் பரீட்சைக்கு ஆஜராகும் விஷயத்தில் உத்தியோக மொழித் தகுதித் தேவையைக் கைவிடுவதுஎனவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

## தேர்த்திருவிழா

ஊர்காவற்றுறை, ஞாயிறு

மிகப்பழமை வாய்ந்த வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா சென்ற புதன்கிழமை நடைபெற்றது. வேலணைத் தீவின் பல கிராமங்களில் இருந்தும் வந்த ஆயிரக்கணக்கான அடியார்கள் விழாவில் கலந்து கொண்டனர்.

## வீதி திருத்தப்படும்

காரைநகர், ஞாயிறு

காரைநகர், தோப்புக்காடு கடற்கரைவீதியை திருத்தும் வேலைகளுக்காக அரசாங்கம் 7000 ரூபா நன்கொடை அளித்துள்ளது. மிக விரைவில் திருத்த வேலைகள் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலே வீதி ...-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17- திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

## இந்திய சுதந்திரதின கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

''இந்தியாவின் சுதந்திர தினம் உலகவரலாற்றிலே ஒரு புனிதமான தினமாகும். இந்தியர்சுதந்திரம் காந்திஜியின் ஆத்மீகப்போராட்டத்தினுலும், தியாகங்கள் பலவற்றினுலும், பெற்றெடுக்கப்பட்ட சுதந்திரமாகும். உலகத்திலே அடிமைகளாக இருந்த பல நாடுகள் இந்தியா சுதந்திரம்பெற்றதைத் தொடர்ந்தே சுதந்திரம் பெற்றிருக்கின்றன. ஏன், நமது இலங்கைகூட இந்தியா சுதந்திரம்அடைந்ததைத்தொடர்ந்தே சுதந்திரம்பெற்றது'' என்று முதலியார் செ. சின்னத்தம்பி இந்திய சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் பேசியபோது குறிப்பிட்டார்

யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை இந்தியர்சங்கக் காரியாலயத்தில் நேற்று மாலை நடைபெற்ற இவ் விழாவுக்கு கே. வெங்கடாசாமி தலைமைவகித்தார். விழாவில் பலர் உரைநிகழ்த்தினர். விழா முடிவில் இன்னிசைக்கச்சேரியும் இடம் பெற்றது.

## ந ர்க்கே ல

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள பல முக்கிய வீதிகள் போக்குவரத்துக்குத் தடையாக மிகவும் மோசமான நிலையிலுள்ளன. இவ்வீதிகளில் மாடுகள் அங்குமிங்குமாக சதா ஓடித்திரிந்துகொண்டிருப்பதாலும், வாகனங்கள் குறிப்பிட்டஇடங்களில் நிறுத்தப்படாமலுமிருப்பதாலும் போக்குவரத்துக்கு மிகவும் இடையூருகவிருக்கிறது. வீதியில் சென்று கொண்டிருந்த ஒருவரை அவ்வீதியில் அலைந்துகொண்டிருந்த ஒரு மாடு தாக்கியதால், அவர் காயங்களுக்குள்ளாகவேண்டிய நிலைமை ஏற்பட்டது. மயிரிழையிலே அவர் உயிர் காப்பாற்றப்பட்டது என்றும் சொல்லலாம். இச்சம்பவம் நேற்றுக்காலை நிகழ்ந்தது. இம்மாதிரியே குறிப்பிட்ட சில வீதிகளில் வாகனப் போக்குவரத்துக்கும் மிகவும் தடையாக இவைகள் இருக்கின்றன. இது பொதுமக்களுக்கு மிகவும் கவலையளிப்பதாகயிருக்கிறது.

## பட்டினசபை தீர்மானம்

குரும்பசிட்டி, ஞாயிறு

மானிப்பாய்பட்டினசபை, காலம் சென்ற ஆனந்தகுமாரசாமி ஞாபகார்த்தமாக தற்போதுள்ள இணுவில் - மானிப்பாய் வீதியை ''ஆனந்தகுமாரசாமி'' எனப் பெயர்மாற்றம் செய்வது என்று தீர்மானித்துள்ளது. இந்த பெயர்மாற்ற வைபவம் இம்மாதம் 22-ந் திகதி நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது. கொழும்பில் உள்ள ஏ. கே. சி. கலாச்சார சங்கத்தின் வேண்டுகோளின் பேரில் இப்பெயர்மாற்றம் செய்ய மானிப்பாய் பட்டினசபை முடிவு செய்துள்ளது.

## கதாப்பிரசங்கம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

சரவணை 'தேவபுரம்' ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் நடைபெற்ற கதிர்காமத்தின் உற்சவத்தின் போது, வண்ணை திரு. வி. க. ஆறுமுகம் 'பக்த அருணகிரி' என்ற விஷயம் பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்தினர். மாவிட்டபுரம் திரு. ச. பொன்னம்பலம் 'பசுவோம்பல்' என்ற விஷயம் பற்றி உபந்நியாசம் நிகழ்த்தினர். திருவிழாவில் திரு. வி. சந்திரசேகரத்தின் இசைக் கச்சேரியும் நடைபெற்றது.

# ஆனையிறவில் பேய்மழை

## 75,000 அந்தர் உப்பு நாசம்

சாவகச்சேரி, ஞாயிறு

இன்று பகல் ஆனையிறவுப்பகுதியில் பெய்த பேய்மழை, ஆனையிறவு உப்பளத்தில் சேகரித்துவைக்கப்பட்டிருந்த சுமார் எழுபத்தையாயிரம் அந்தர் உப்பை நாசம்செய்துவிட்டது.

இன்று பகல் பதினெரு மணி முதல் இரண்டு மணி வரை ஆனையிறவுப்பகுதியில் கடுமையான மழைபெய்தது. மூன்று மணி நேரத்தில் 6.97 அங்குலம் மழை பெய்திருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இம் மழை காரணமாக ஆனையிறவு உப்பளம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

பெரும்போகத்தில் பதினுலாயிரம் தொன் உப்பு சேகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டதென்றும் ஆனல் இன்று பெய்த பேய் மழை இந்த நம்பிக்கையை நாசமாக்கி விட்டதென்றும் ஆனையிறவுஉப்பள அதிகாரியொருவர்கவலை தெரிவித்தார்.

மூன்று மணி நேரத்தில் இவ்வளவு அதிகமான மழை இப்பகுதியில் கடந்த பல காலமாக பெய்யவில்லை என்றும் அவர் கூறினர். மழைகாரணமாக இப்பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்தும் தடைப்பட்டது.

## இசைவிழா நிகழ்ச்சிகள்

மீசாலை, செவ்.

மீசாலை இசைவிழா நேற்று ஆரம்பமானது, மீசாலை தமிழிசைச்சங்கத்தின் ஆதரவில் விக்கினேசுவர வித்தியாசாலையில்நாளை புதன்கிழமை வரை இவ்விழா நடைபெறும்.

இன்றைய நிகழ்ச்சிகள் விபரம் வருமாறு:

6.30—6-45 ஆராதனை, 6-45—7-15 துவாரகை இசைமாணவிகள் பாட்டு, 7-15—7-45செல்வி நாகேஸ்வரி வல்லிபுரம், செல்வி ஜெகதாம்பிகை கணபதிப்பிள்ளை பாட்டு, செல்வி நீலாம்பிகை செல்லையா வயலின், செல்வன் பொ. சுகானந்தா மிருதங்கம், 7-45—8-15 செல்விகள் மகாலட்சுமி பதஞ்சலி, மகாரஞ்சிதம் பதஞ்சலி சகோதரிகள் பாட்டு, செல்வி நீலாம்பிகை செல்லையா வயலின், செல்வன் பொ. சுகாநந்தா மிருதங்கம். 8-15—9-15 திரு. சு. சோமசுந்தரம் பாட்டு, திரு. சு. சர்வேசுர சர்மா வயலின், திரு. வி. அம்பலவாணர் மிருதங்கம், திரு, குமுக்கா கணபதிப்பிள்ளை கெஞ்சிரா, 9-15—9-30 தலைமையுரை இசைப்புலவர் திரு, சி. செல்வத்துரை. 9-30—10-30 திரு. அ. நமசிவாயம் புல்லாங்குழல், செல்வி ஞானம்பிகை முருகேசபிள்ளை வயலின், திரு. எம், என். செல்வத்துரை மிருதங்கம், திரு. குமுக்கா கணபதிப்பிள்ளை கெஞ்சிரா, 10-30—11-30 திரு. வே. ஜெயவீரசிங்கம் பாட்டு, திரு. ச. சர்வேசுர சர்மா வயலின், திரு. எம். என். செல்வத்துரை மிருதங்கம், திரு. குமுக்கா கணபதிப்பிள்ளை கெஞ்சிரா.

## இசையரங்கேற்றம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

சரவணை ஸ்ரீகதிர் வேலாயுத சுவாமி தேவஸ்தானத்தில் செல்வி தேவநாயகி சொக்கலிங்கத்தின் ''இசையரங்கேற்றம்'' திரு. பி. சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்றது. செல்வி தேவநாயகி யாழ்ப்பாணத்தில் இசைபயின்று வட இலங்கைச் சங்கீத சபையாரின் பரீட்சைகளில் சித்தியடைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## வானொலி நிகழ்ச்சிகள்

செவ்வாய் 17-8-65

கொழும்பு

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 வாய்ப்பாட்டு, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும்பயிர், 5-45 திரைஇசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 மெல்லிசை, 7-00 வயலின், 7-30 மத்தாப்பு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நேயர்விருப்பம், 9-45 நாதஸ்வரம்.

## பறக்கும் தட்டு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறாசெய்ரோ எனுமிடத்திலுள்ள தேசிய புகையிரத வாகன் தொழிற்சாலையில் வேலை பார்க்கிருர்.

அந்தக் குள்ளமான விண்வெளி விமானி, திரு. ஜோட்டிடம் தமது விஜயத்தை உலகுக்கு பறைசாற்றும்படி கூறியிருந்தாராம். தமது பூவுலக விஜயத்தை ஊர்ஜிதம் செய்யும் முகமாக ஒரு பொருளை திரு. ஜோட்டிடம் கொடுத்திருக்கிருர். அந்தப் பொருள் உலகத்தில் இல்லாத, காணக்கிடைக்காத உலோகமாகும்.

அந்த உலோகத்தை கொடுத்ததும் வானவெளி விமானி இடத்தைவிட்டு மறைந்து சென்றுவிட்டார்.

பறக்கும் தட்டின் விமானியொருவருடன் பூவுலகவாசி பேட்டி கண்டது இதுவே முதல் தடவையாகும். இந்தப் பெருமையை திரு. ஜோட் தேடிக்கொண்டார்.

## நல்லூர் நிகழ்ச்சிகள் இன்று

பகல்உற்சவம்: வெள்ளி மயில் அன்னம். இரவு உற்சவம்: சிங்கம், இடபம்.

திருப்புகழ் மண்டபம் இசையரங்கு: லிங்கம் சகோதரர்கள்-பாட்டு, ரி. வி. பிச்சையப்பா-வயலின், ரி. ஜெயசுந்தரம்-மிருதங்கம்.

கந்தபுராண விரிவுரை: ஸ்ரீ மணிபாகவதர்--'சூரன் அமைச்சியல்.'

## சுந்தரர் குருபூசை

வல்வெட்டித்துறை, ஞாயிறு

அல்வை இந்து வாலிபர் சங்கம் சுந்தரர் குருபூசையை சிறப்பாகக் கொண்டாடியது. இவ்வைபவத்தில் மாணவர்களின் பக்திப்பாடல்களும் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

தொண்டமானுறு ஆனந்தாச்சிரமத்திலும் சுந்தரர் குருபூசை சிறப்பாக நடந்தேறியது. நண்பகல் விசேஷ பூசையும் அன்னதானமும் நடைபெற்றன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org